பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 09 2026 TUESDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வடகிழக்கு மாநிலங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் கடந்த பத்து ஆண்டுகளில் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி, குஜராத்தில் இன்று 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

3. வளர்ச்சிக்கும் பொது நலனுக்கும் மண்டலக் கவுன்சில்கள் முக்கியப் பங்காற்றுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

4. லக்ஸம்பர்க்குடன் வர்த்தக, பொருளாதார உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

5. 17 மற்றும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் போட்டி, சீனாவின் Chengdu-வில் இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களின் உள்கட்டமைப்பு வசதிகள் கடந்த பத்து ஆண்டுகளில் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஷில்லாங்கில், மேகாலய மக்களும் அம்மாநில அரசும் இணைந்து அவருக்கு அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

மேகாலயாவின் செழுமையான கலாச்சார பாரம்பரியம், இயற்கை அழகு ஆகியவற்றை அவர் எடுத்துரைத்தார். வளர்ச்சி என்பது அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும், சமூகத்தில் யாரும் பின்தங்கிவிடக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

போக்குவரத்து, தொலைத் தொடர்பு உள்ளிட்டவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த குடியரசுத் துணைத் தலைவர், தொலைதூர கிராமங்களை நகரங்களுடன் இணைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் வடகிழக்குப் பகுதியில் பிரதமரின் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் 47 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், 46 ஆயிரம் கிலோமீட்டருக்கும் அதிகமான கிராமப்புற சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளும் சமமாக வளர்ச்சி அடைய வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியின் போது ஆயிரத்து 11 கோடி ரூபாய் மதிப்பிலான ஐந்து திட்டங்களுக்கு திரு சி.பி. ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டினார்.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, குஜராத்தில் இன்று 35 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

இன்று பிற்பகல், வதோதராவில் நடைபெறும் நிகழ்ச்சியில் நிறைவடைந்த திட்டங்களைத் தொடங்கி வைப்பதுடன், புதிய திட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேற்கு மண்டல சரக்கு ரயில் போக்குவரத்து வழித்தடத்தின் மூன்று முக்கியப் பிரிவுகளைப் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். 326 வழித்தட கிலோமீட்டர் நீளம் கொண்ட இவை 20 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

நான்கு சரக்கு ரயில் சேவைகளின் சேவைகளையும் பிரதமர் கொடியசைத்துத் தொடங்கி வைக்கிறார். அத்துடன், தாண்டா - வதோதரா இடையே புதிய பயணிகள் ரயில் சேவையையும் அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

ஜோபத் - தாண்டா சாலை புதிய ரயில் பாதைத் திட்டத்தை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

329 கிலோமீட்டர் தூரத்துக்கு, 9 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள மூன்று ரயில்வே திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

ஆயிரத்து 780 கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

2 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பில் குஜராத் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்கும் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டுவதுடன், நிறைவடைந்த திட்டங்களையும் தொடங்கி வைக்கிறார்.

>>>>><<<<<

வளர்ச்சிக்கும் பொது நலனுக்கும் மண்டலக் கவுன்சில்கள் முக்கியப் பங்காற்றுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

கோவாவின் பனாஜியில் நடைபெற்ற மேற்கு மண்டலக் கவுன்சிலின் 28-வது கூட்டத்திற்கு அவர் தலைமை வகித்து அவர் பேசினார்.

மேற்கு மண்டலம் நாட்டின் மிகப்பெரிய பொருளாதார, தொழில் மற்றும் நிதி மையமாகத் திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி, துறைமுகங்கள், புத்தொழில் நிறுவனங்கள், சுற்றுலா, கடல்சார் பொருளாதாரம் என பல்வேறு துறைகளில் மேற்கு மண்டலம் மிகப்பெரிய பங்களிப்பை வழங்குகிறது என்று அவர் கூறினார்.

தற்போது மண்டல கவுன்சில் கூட்டங்கள் நடத்தப்படுவது அதிகரித்துள்ளதாகவும், இவற்றில் மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

2004-ம் ஆண்டுக்கும் 2014-ம் ஆண்டுக்கும் இடையிலான காலகட்டத்தில், 25 கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றதாகவும், 2014-ம் ஆண்டுக்குப் பிறகு மொத்தம் 71 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இக்கூட்டங்களில் ஆயிரத்து 893 விவகாரங்கள் விவாதிக்கப்பட்டு, அவற்றில் ஆயிரத்து 445 விவகாரங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் இது

இக்கூட்டங்களின் செயல்திறனை வெளிப்படுத்துகிறது என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் தொழில்நுட்பங்களில் சுயசார்பை எட்டும் இலக்குடன், மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தில்லியில் தனியார் தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர். முப்படைகளின் திறன்கள் தொடர்ந்து மேம்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

அச்சுறுத்தல்களுக்கு உறுதியுடன் பதிலடி கொடுக்கும் சுதந்திரம் பாதுகாப்பு படைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

லக்ஸம்பர்க்குடன் வர்த்தக, பொருளாதார உறவுகள் மேலும் வலுப்படுத்தப்படும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள லக்சம்பர்க் நாட்டின் துணைப் பிரதமர் திரு சேவியர் பெட்டல், புது தில்லியில் நேற்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது, சரக்குப் போக்குவரத்து, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், விண்வெளித் துறை, நிதிச் சேவைகள் உள்ளிட்ட முக்கியத் துறைகளில் இந்தியா-லக்சம்பர்க் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு பியூஷ் கோயல் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியா-லக்சம்பர்க் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்தவும், இரு தரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

லக்சம்பர்க் துணைப் பிரதமர், தில்லியில் வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருடனும் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்திய – ஐரோப்பிய யூனியன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து இந்தச் சந்திப்பின்போது பேச்சு நடத்தப்பட்டதாகவும் இந்த ஒப்பந்தத்தால்

இருநாடுகளுக்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

செயல்திறன் சார்ந்த ஊக்கத்தொகை திட்டம் உள்ளிட்ட, பொதுத்துறை வங்கி ஊழியர் சங்கத்தினரின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

நேற்று வங்கி ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளுடனான ஆலோசனையின் போது, அவர் இதனை தெரிவித்தார்.

>>>>><<<<<

அனைவருக்கும் சிறந்த சுகாதார சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்தியா செயல்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

கிழக்கு தைமூரில் நேற்று நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் மண்டல குழுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

பிற நாடுகளுடன் சுகாதார துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு. ஜெ.பி. நட்டா கூறினார்.

>>>>><<<<<

தலைநகர் தில்லியில், காற்று மாசை கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

காற்று மாசை கட்டுப்படுத்துவது குறித்து தேசிய தலைநகர் பகுதியில் உள்ள 63 நகரங்களின் உள்ளாட்சி பிரதிநிதிகளுடன் நேற்று அவர் ஆலோசனை நடத்தினார்.

காற்று மாசை கட்டுப்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கும் முக்கியப் பங்கு உள்ளதாக திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

உலக இயன்முறை மருத்துவ தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பிசியோதெரபி எனப்படும் இயன்முறை மருத்துவம் குறித்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், 1996ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செப்டம்பர் 8ஆம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த தினத்தின் இந்த ஆண்டு கருப்பொருள் குறித்தும், பக்கவாதத்தை தடுப்பது குறித்தும் சென்னையைச் சேர்ந்த இயன்முறை மருத்துவக் கல்லூரி முதல்வர் திரு. ஆண்டனி லியோஆசிர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஆண்டனி 34 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சர்வதேச எழுத்தறிவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

எழுத்தறிவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், 1966ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் இதே நாளில் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மக்கள் பூமி மற்றும் வளத்திற்கான எழுத்தறிவு என்ற கருப்பொருளுடன்

புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி பங்கேற்கவுள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் பெரிய துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறன் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழகத்தின் தூத்துக்குடி துறைமுகம் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகமான சரக்குகளை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் கனமழை மற்றும் வெள்ளதால் 25 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பரேலி, ஷாஜஹான்பூர் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாவட்டங்களில் கனமழை காரணமாக, பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

17 மற்றும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் போட்டி, சீனாவின் Chengdu-வில் இன்று தொடங்குகிறது.

வரும் 13-ம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>>END<<<<<